உ
சிவமயம்



# மாணிக்க மாலை

31.03.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சிங்கைநகர் புலோலியை பிறப்பிடமாகவும்
வல்லைவீதி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்
# கணபதிப்பிள்ளை மாணிக்கம் (A.V.K)

(ஓய்வுநிலை மாவட்ட இணைப்பாளர், பனை அபிவிருத்திச் சபை
கிளிநொச்சி, அகில இலங்கை சமாதான நீதவான்)

**அவர்களின் நினைவில் உருவான**

# மாணிக்க மாலை

# 31.03.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

நாம் சற்றும் எதிர்பாராத வகையில் 01.03.2019 அன்று

பரந்தாமன் பாதங்களை அடைந்த

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் – நாம்

என்றும் நினைந்துருகும் எம் நினைவிலுறை

தெய்வத்தின் பாதக் கமலங்களில் அவர் தம்

நினைவில் உருவான இப்பாமாலையை

ஈரவிழிகளுடன் இதயக்

காணிக்கையாக்குகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அன்னை மடியில்
28.12.1946

இறைவனடியில்
01.03.2019

# அமரர்
# கணபதிப்பிள்ளை மாணிக்கம்

## திதி வெண்பா

ஆண்டு விளம்பி மாசி பதினேழு வெள்ளிக்கிழமை
பூண்ட திதி அபரபக்க தசமி தான் – ஓங்கு புகழ்
மாணிக்கம் எனும் பெயரோன்
மாயவன் தாழ் பணிந்த நன் நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

மங்கயற்கரசி வளவர்கோன் பாவை
வரிவளை கைம்மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாடோறும் பரவ
பொங்கழலுருவன் பூதநாயகனார்
வேதம் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த
ஆலவாயாவதுமிதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையேயுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூற்றுகந் தாயே
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மல்லிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருஞ் சிவஞானம்
பவமதனைஅற மாற்றும் பாங்கிலோங்கிய ஞானமம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெஞ்ஞானம்
சம்பந்தர் தரமுணர்ந்தார் அந்நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொடவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றடும் அடியவர் புத்தியிலுறைபவ
கற்பகமென வினைகடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரண்மகள்
மற்றெரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழிடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரமெரி செய்த அச்சிவலுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துயரதுகொடு சுப்பிரமணிபடு
அப்புனமதனிடை இயமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க  குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கம் அவர்களின் மாண்புறு பயணம்

மாணிக்கம்
அந்தப் பெயருக் கேற்ற சுந்தரவதனம்
சூட்சுமம் இல்லாத வெள்ளிடைப் பேச்சு
சோர்வற்ற தோற்றம் சொக்கும் செம்பவளம்
சுற்றத்தை என்றும் நேசித்த நேயர்
விட்டுப்பிரியும்வரை வியாபித்த அன்பு
என்றும் விடைபெறாதிருக்கப்போகுமவர் நினைவு
தொட்டு எழுதப்படும் அவர் தூய வரலாறு

எட்டுத்திக்கும் ஏற்றமிகு அறிவுக்கு
கொட்டு முரசுடனறிந்த
உயரீழ வடமராட்சி
மட்டற்ற பொக்கிசங்கள்
மாண்புமிகு பெருமைகள்
கொட்டிக்கிடக்கும் முத்தமிழ் நிலம்
பெற்றெடுத்த பெரியனில் ஒருவர் மாணிக்கம்
கற்றவர் இலங்கும் கண்ணன் பதியாம்
காவலாம் வல்லிபுரக் குறிச்சியில்
இவரை பெற்றெடுத்த பெருந்தவங்கள்
கணபதிப்பிள்ளை சின்னாச்சி
சிங்கைநகர் புலோலி தெற்கில்
பூர்வீகமான பொன் வண்ணத்திற்கு
எண்ணத்தில் நிலைக்க இயைந்த நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமை பல
வரமாய்க் கூடிய மாணிக்கம்.
அன்னம்மா சின்னராசாவுக்கு
முன்னவனாய் மூத்தவனாய்
அண்ணனென அழைக்க வாய்த்தவராய்
மந்திகை மெதடிஸ்த மிசன் பள்ளியில்
இம் மாணிக்கத்தின்
மென் பாதம் பாலர் கல்விக்காய் தொட்டது.
முற்றிடும் கல்விக்காய் முந்தியது
தேவரையாளி இந்துவில்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பள்ளியில்
இன்னுமிவ் மேன்மை உயர்ந்தது
முடிவாய் மேதினபுகழ் காட்லியில்
பட்டை தீட்டியது இப்பண்பு மாணிக்கம்

வித்தகங்கள் கற்ற வடமராட்சியின்
சொத்துக்களில் ஒன்றாம் மாணிக்கம்
பத்துகள் கடந்த அப்பருவத்தில்
முற்றிய கல்வி முழுமையுடன்
முழுவீச்சுடன் ஏற்ற தொழில்வாண்மை
கற்பக தருவின் காப்பரணாம்
கவனிப்பாம் வளம் தருவிப்பாம்
இத் தமிழ் ஈழத்தின் இயல்பழகாம்
பனை வள பணிச்சபையில்
தன் எண்ணத்தை சுரந்தும் உழைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னத பொதுமுகாமைப்பணியில்
பின்னுயர்ந்துவரும் பயணத்தில்
கண்ணியம் கல்வியிலுயர்ந்த காரிகை
அச்சுவேலி ஆசைப்பிள்ளை பொன்னு தம்பதியின்
இங்கிதம் தெரிந்த இல்லறத்தவளாய்
ஈன்ற புத்திரி இராசமலரெனும் தேவியை
கைப்பிடித்தார் மாணிக்கம்

இல்லறத்தின் இனிது நாட்கள்
சொல்லைக்கடந்து சுவர்க்கமாகி
மெல்ல கனிந்து மேன்மை சொட்ட
வண்ணமகவாய்
சுதர்சன் மங்கை சுனேதா
பின்னுமினியன் சஞ்ஜீவன்
பெற்று இல்லம் பெருமை கொள்ள
இன்னுமொரு வரமெனவே
ஈன்றெடுக்கா தவப்பேறாய்
விஜயகுமார் விதுசனென
வீட்டின் அன்பில் வளர்த்தெடுத்து
பல்கலைக்கழகம் வரை
பட்டம் பெறத் தான் வளர்த்து
மட்டிலாத மகிழ்ச்சி கண்டார்
மாணிக்கப் பெருந்தகையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணில் வைத்து கனவு பூசி
மண்ணில் பற்றோடும் பண்போடும்
எண்ணிய ஆற்றல் கல்வி மேன்மையும்
தன் பிள்ளைகள் பெற பாடுபட்டார்
தந்தை சொல்லேற்று தகவுடைய
வல்லமை பலபெற்ற பிள்ளைகள்
பெண்ணவள் சுனேத்தா ஆசிரியர்
நண்ணும் போர் நாட்டுக்குணத்தால்
மண்ணைக் கடந்து பிறநாட்டில்
கண்ணியமான வாழ்வில் புத்திரர்கள்
மைத்துனி வசந்தகுமாரியை – மகளாக
வளர்த்தெடுத்து கட்டப்பிராய் வாழ்
விஜயகுமாரெனும் பொன்ராசாவிற்கு மணமுடித்து
விதுசன், நிருபனா, லதுசனென பெறாமக்கள் மூவர்.

தான் பிறந்த மண்ணின்
மாண்புடைய பற்றுக்காய்
ஈன்றவரை கடமைக்காய்
இயன்றவரை வழிநடத்தி
காண்புற்று கனவுடனிருந்தவர்
வன்னியெலாம் போருள்
வாழ்வையெலாம் கொடுத்து
பிள்ளையர் மனைவியோடு
பேரெழுச்சி கொண்ட பெருமையன்
இப்பெரும் பயணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுநகர் பாலசுப்பிரமணியம்
நாகேஸ்வரியீன்ற
நற்புத்திரன் காந்தரூபனை
மகள் சுனேதா மணம் செய்தாள்
மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் பரமேஸ்வரி
இணையர் தந்த பிரதீபா
மகன் சுதர்சனுக்கு துணையானாள்
மகிழந்திருந்தார் மாணிக்கம்
சுனேதாவின் புத்திரர்கள் நதிஷன் ஜஸ்மிகனை
பேரராய் கண்டு பேறெனவே அணைத்து
ஆறெனவே அகம் குளிர்ந்தார்

அகதி வாழ்வு அல்லல் வாழ்வு
சகதி வாழ்வு சரித்திரத் தமிழர்வாழ்வு
அனைத்துக்கும் நெகிழ்ந்திருந்த
நிமிந்த கொள்கைத்தமிழன்
விருப்புற்று பெருநிலமெங்கும்
புறநானூற்றுப் பெருமையுடன்
உருக்கொண்டு திரிந்த உண்மையன்
ஊர்விட்டு ஊரலைந்தும்
வேர் பற்றிக்கிடந்து விழுதான
விசுவரூபங்கள் பலகண்ட சமுகப்போராளி
தமிழீழப் பற்றாளன்
பனைவளத்தின் திடத்தரத்தை
உயர்த்திடவே கிளிநொச்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் ஊராய் உழைத்தார்
போரெழுச்சித் தலைவராய்
பேரெழுச்சிப் பிரசங்கம் செய்தார்
ஊர்வளர்ச்சியில் தொண்டனாய்
உபதலைவனாய் பொருளாளனாய்
அங்கத்தவனாய் ஆளுமையாளனாய்
அபிவிருத்தி சங்கங்களில்
அரசசார்ப்பற்ற அமைப்புக்களில்
செஞ்சிலுவையில் என இன்னபிறவற்றில்
முன்னவனாய் இருந்து மாணிக்கம்
ஆற்றிய பணி போற்றுதற்குரிய!
ஆதலால் அவரொரு சமாதான நீதவானும்!

வல்லிபுரத்தாழ்வாரின் உற்ற பக்தன்
உற்சவ காலமெல்லாம் நற்றவமென
நாற்பத்தைந்து ஆண்டு காலமாய்
"கோகுலம்" தாக சாந்திப் பந்தலை
குளிர்வித்தடியார்க்காய் நடத்தியோன்
அச்சுவேலி வடக்கில் அமர்ந்தருளும்
சித்திரவேலாயுதர்க்கு தொண்டன்
தேர்த்திருவிழாவின் பங்காளிபக்தன்
ஆலய தலைவனாயிருந்து
அற்புதப்பணி செய்த ஆன்றோன்
முறிகண்டிப்பிள்ளையாரின் பெருஞ்சபை
நிர்வாகப் பணியிலொரு உறுப்பினர்
நிலையற்ற இவ்வுலக வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகரற்ற பல பணியை ஏற்று
மனதெல்லாம் நிறைந்த மாணிக்கம்
ஈழநிலத்தினில் ஈன்ற தன் பிறவி
மாண்டிடும் வரைக்கும் மண்ணோடுவாழ
தாண்டிய இன்னல் எளிமை ஈகம்
ஒன்றல்ல பல நூறா ஆயிரம்
வடமராட்சி உதித்து வன்னியெங்கும்
சென்னி சிலிர்த்த ஈழப்போர்கண்டு
முள்ளிவாய்க்கால் வரை சென்று
அந்த மூச்சில் அழியா பெருவலிகண்டு
அல்லலுற்று அகதியாகி நொந்தும்
பின்னும் விடாப்பிடியாய்
விடுதலை பேசலுற்று புறப்பட்டு
வன்னி வவுனியாவில் உறைந்து
ஆங்கோர் விபத்திலும் சிக்குண்டு
எண்ணத்தில் என்றும் மறையா
இருப்பாம் கிளிநொச்சியும் கடந்து
கடைசியில் கட்டைப்பிராய் வந்தார்
கண்ணுக்குள் நிற்கும் நெடிய தோற்றம்
நெஞ்சுக்கினிய மாணிக்கம்.
உற்றார் உறவுகள் ஊர்கூடி துயருற
நற்றவமாய் இம்மண்ணுக்கு வந்த
நல்ல பெருமகன் மாணிக்கம் மறைந்தார்
மறுபடி நெடியதாய் யாவர் மனதிலும்
ஆண்டவன் திருவடியிருந்து தோன்றினன்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணைந்ததே என் வாழ்வின் ஒளி விளக்கு

காலம் முடிந்ததென்று காலன் உனை அழைத்தானோ?
காதில் விழுந்த செய்தி கனவாகிப் போகாதோ?

கரம் பிடித்த நாள் முதலாய் – என்
காவலனாய் இருந்தவனே
தாங்க யாருமின்றித் தவிக்கின்றேன்
என் கண் கண்ட தெய்வமே

ஆலம் விழுதுகள் போல் உறவுகள்
ஆயிரம் இருந்தென்ன
தாங்கிய வேரை இழந்து
தவிக்கின்றேன் நான் – இங்கே

தாங்கள் தந்த நிம்மதியை இனி யார்
தருவார் எனக்கு – தாங்கள்
அன்பாகப் பேசிய நாட்கள் பல
அறிவுக்காய்த் திரிந்த நாட்கள் சில

மம்மி, மம்மி என்று அன்பொழுக அழைக்கும் –உம்
மதுரக் குரலை இனி எப்போ கேட்பேன்
என்னைச் சீராக்க நீங்கள் எடுத்த நாட்கள்
என் கண்ணீரால் கரையுது – இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இழந்தது தங்களை மட்டுமல்ல – அனைத்தையுமே
என் வாழ்வின் வளத்தையும் வனப்பையும்
இழந்து தவிக்கிறேன் இங்கே
இனி வருமோ? என் வாழ்வில் வசந்தம்

"கோடையில் ஒரு நாள் மழை வரலாம் என்
கோலத்தில் இனிமேல் எழில் வருமோ"

கடமை முடிந்ததென்று கடவுளிடம் சென்றீரோ
எனினும் தாங்கள் என்றும் கண்ணன் காலடியில்
நித்திய இன்பத்தைப் பெறுவீர்களெனத் தன்னைத்
தானே தேற்றிக் கொள்ளும்.

துணைவி
தேவி.

| | |
|---|---|
| **மதிக்க வேண்டிய 3** | **முதுமை, சட்டம், மார்க்கம்** |
| **போற்ற வேண்டிய 3** | **அறிவு, அன்பு, பண்பு** |
| **காக்க வேண்டிய 3** | **வாக்குறுதி, நேர்மை, பணிவு** |
| **தவிர்க்க முடியாத 3** | **முதுமை, கவலை, மரணம்** |
| **அஞ்ச வேண்டிய 3** | **களவு, பொய், கோள்** |
| **அடக்க வேண்டிய 3** | **நா, கோபம்,சோதனை** |
| **நேசிக்க வேண்டிய 3** | **நேர்மை, தூய்மை, கடின உழைப்பு** |
| **வெறுக்க வேண்டிய 3** | **பொறாமை, பிடிவாதம், தற்பெருமை** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமகனின் மனக்குமுறல்

உடல் தந்து, உயிர் தந்து
உணர்வும் தந்து என்னை
இம்மண்ணில் உருவாக்கிய அப்பாவே

என் கண்கள் உடைந்து
கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது
என்னைத் தூக்கி வளர்த்த தந்தையே
உங்களை நசான் தூக்கிப் பார்க்கவில்லையே

நீங்கள் வாழும்போது "மாணிக்கம்"
மரணித்த பின் பட்டை தீட்டிய மாணிக்கம்
தெய்வங்கள் கூடத் தோற்றே போகும்
தந்தையின் அன்பின் முன்னே
தாலாட்டுப் பாடும் தாயின் அன்பு
தந்தையின் அன்பின் பின்னே
தந்தையே தாங்கள் விட்டுச்சென்ற
சமயப் பணியினைத் தொடர்ந்து முன்னெடுப்பேன்
என்பதை உறுதியுடன் தங்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காக
இறைவனை இறைஞ்சும்



தலைமகன்
சுதர்சன்
(ஜேர்மனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே மகளின் குமுறல்

## எப் பிறப்பில் காண்பேன் இனி அப்பா?

கட்டிலிலும் தொட்டிலிலும்

தோள்மீதும் மார்மீதும் என்னைத் தூக்கி வளர்த்த அப்பாவே

உங்கள் முகத்தில் புன்னகையைத் தவிர வேறெதையும் பார்த்ததில்லை

ஒரே ஒரு பெண் பிள்ளை என்று அடிக்கடி கூறுவீர்களே

இனி உங்கள் மதுரக் குரலே எங்கே நான் கேட்பேன் – அப்பா

எல்லோரையும் புன்னகையோடு வரவேற்று விருந்தளிப்பீரே அப்பா

உங்கள் சேவையை உடனிருந்து கண்டவள் நான்

இனி யார் முடிப்பார் உங்கள் பணியை

நான் கண்ட மாணிக்க தீபம்

தமிழ் மண் கண்ட கலங்கரை விளக்காய்

என்றும் உங்கள் பசுமையான நினைவுகள் எம் மனதில்

தென்றலாக வீசும் அப்பா!

நீங்கா நினைவுகளுடன்

ஏக புத்திரி

சுனேத்தா காந்தரூபன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய மகன் புலம்பல்

கண் காணாத தேசத்திலே நான்
உங்களைக் காணக் கிடைக்காத பாவி நான்
என்னைத் தாங்கிய உங்களை
என்னால் தாங்க முடியவில்லை

மறக்கமுடியவில்லை உங்களை நீங்கள்
என்னை அழைத்த ஒவ்வொரு வார்த்தையும் பசுமையானவை
என்மீது நீங்கள் வைத்த பாசத்திற்கு அளவே இல்லை
சஞ்சி, சஞ்சி என்று பாசமாக உருகுவீர்கள்

தூங்கும்போது உங்கள் நினைவு
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் உருவம்
தமிழ் மண் மீது தாங்கள் கொண்ட பற்றை நானறிவேன்
நீங்கள் என்னுடன் இருந்த காலங்கள் பசுமையானவை

சொந்தங்கள் தொடரவேண்டும்
உறவுகள் உறுதியாக வேண்டும்
என்று எண்ணி எண்ணிப்
பழகும் உங்கள் உறவை
இனி எங்கே நாம் தேடுவோம்
உங்கள் ஆன்மா உய்வடைய
உண்மையாக வணங்குகின்றேன்

தங்களுக்கு கடமை செய்யக் கிடைக்காத
பாவி மகன்
சஞ்ஜீவன் (பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மற்றுமோர் மகன் - பெரியப்பா எம் தந்தை

என் தந்தை அவர்

கம்பீரம் அவர் நடை

அவர் எம் சொத்து

மாணிக்கம் என்னும் முத்து

மனிதருள் மாணிக்கம் அவர்

தடைகளைக் கடந்து பல சரித்திரங்களைப் படைத்தவர்

சோதனைகளையும் வேதனைகளையும் சாதனைகளாக்கியவர்

பாதியிலே எமைவிட்டுப் பிரிந்ததேனோ?

கதிரையிலே நீங்கள் கம்பீரமாய் அமர்ந்து இருக்கையிலே

உங்கள் சாறத்தின் இடையில் நான் செல்லமாய்ச் சுருண்டு

உங்கள் முகத்தைப் பார்த்த அக்காலம்

மறக்க முடியவில்லை.....

போர் முள்ளு என்னைத் தைத்த போதும் – பாசப்

போர்வையால் என்னைக் காத்தவர் நீங்கள் – பங்கருக்குள்

உங்கள் தலைப்பகுதியில் என் கால்

உங்கள் கால்ப்பகுதியில் என் தலை

எனப் படுத்துறங்கிய காலம்

என் அகத்தில் இன்னும் அகலவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகம் வரை என்னை படிக்கவைத்தவரே

எழுத வார்த்தைகள் , சொற்கள் அதிகம்

இந்தப் பாமாலை காணாது. – உங்களுக்கு

நிறைவேறாத ஆசைகள் பல என்று கூறினீர்கள் – அவற்றை

நிறைவேற்றும் பாதையில்

உங்கள் உயிராய்

உங்கள் விம்பமாய்

உங்கள் மூச்சாய் – நான் இருப்பேன்

உங்கள் பசுமையான நினைவுகளுடன்

மகன்

வி.விதுசன்

காலங்கள் கடந்து போனாலும் – உங்கள்

ஞாபகங்கள் மறையாது பெரியப்பா

பலபேரின் கண்ணீரைத் துடைத்தவரே

இன்று எம் கண்ணீரை துடைக்க நீர் இன்றி

நாம் தவிக்கின்றோம் – மறு ஜென்மத்தில்

மனிதனாகப் பிறந்து பல சாதனைகள் புரியவேண்டும்

எனக் கடவுளைப் பிரார்த்திக்கும்

பெறாமகன்

வி.லதுசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

பெருமையோடு வாழ்ந்த குடும்பத்தில்
பெரு விருட்சம் சாய்ந்தது போல்
குடும்பத்தின் குல விளக்காய் ஒளி வீசிய
உங்களைப் போல் நல்ல மனிதர் ஒரு சிலரை
இவ்வுலகில் நினைவிழக்க முடியாது
பாசமுடன் வாழ்ந்த காலத்தை நாம் மறவோம்.

பெற்றார் போல் நாளெல்லாம் ஆதரவு தந்தவரே
பிரியமுடன் எம்மீது பாசத்தை வைத்தவரே
உற்ற துணையாயிருந்து ஊரார் மெச்ச
உரிமையுடன் எமைக் காத்த உத்தமரே
அமைதி, சாந்தம், அன்பு வாழ்க்கை
அத்தனையும் உங்களிடம் கண்டோம் மாமா

உங்களோடு நாம் வாழ்ந்த காலத்தில்
ஊரார் மத்தியில் உங்களுக்கு இருந்த
செல்வாக்கையும், சிறப்பையும் கற்றவர்கள்
உங்களை நாடி வந்து ஆலோசனைகள்
கேட்கும் போது கண்டு நாம் பெருமை கொண்டு
எம் நெஞ்சத்தின் மஞ்சத்தில் உங்களை வைத்திருந்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைத்து நீங்கள் சோர்வுற்று இருந்தபோதும்
எம் முகம் கண்டதுமே தேற்றம் கொள்வீர்
பிழைப்பீர்கள் என நம்பி நாமிருக்க
பேசாமல் பிரிந்தெம்மைப் போய்விட்டீரே
இறக்காமல் இருப்பதற்கு வழியண்டென்றால்
எங்கள் மாமா உமதுயிரைக் காத்திருப்போம்

பிறந்தவர்கள் நிரந்தரமாய் இருந்ததில்லை
இருந்தாலும் அவர்கள் உயிர் நிலைத்ததில்லை
இறந்தவரை எண்ணி அழுது என்ன இலாபம்
எல்லோருக்கும் மரணம் ஒன்றே இறுதியாகும்
அது உறுதியாகும்

உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்

பா.காந்தரூபன்

சு.பிரதீபா

## பொன்மொழிகள்

1. அகம்பாவம் என்பது ஒரு பொல்லாத குதிரை அதுதன் எசமானை ஒருமுறையாவது கீழே தள்ளாமல் விடாது.

2.எப்போதும் அச்சத்தில் இருப்பதைவிட ஆபத்தை ஒருமுறையாவது சந்திப்பது மேல்

3.அடுத்தவரைக் குறை சொல்லும்போது இனிப்பாக இருந்த பேச்சும் உணர்வுகளும் தன்னைப் பற்றிப் பிறர் குறை கூறும்போது கசக்கிறது.

4.வெற்றி என்பது நிரந்தரம் அல்ல தோல்வி என்பது இறுதியானதும் அல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அம்மப்பா

அன்பின் உறைவிடமே அம்மப்பா
அணையாத அகல் விளக்கே அம்மப்பா
நாம் பிறந்த நாள் முதலாய்
நலமுடன் எம்மை அரவணைத்து
ஆயிரத்தில் ஒருவனாய் அன்புடன் எம்மை
பாசத்தின் சிகரத்துக்கு எடுத்துச் சென்று
சிரித்த முகத்தோடும் சிந்தை மகிழ்வோடும்
சீராட்டி தாலாட்டி எம் சிந்தை விரும்பி கேட்கும்
தீன், பண்டங்களையும், விளையாட்டு பொருட்களையும்
மனமகிழ்வோடு வாங்கித் தந்து
இரவு பகல் பாராது இனிதான பாடல்களால்
தாலாட்டி கண்ணுறங்க வைப்பீர்கள்
ஆசையோடு கண்ணுறங்க வைத்த நீங்கள்
நிரந்தரமாய் கண்ணுறங்கி விட்டீர்களே அம்மப்பா
எம் நெஞ்சம் கலங்குகின்றதே அம்மப்பா

பாசமுடன்
பேரப்பிள்ளைகள்
கா.நதிஷன்
கா.ஜஸ்மிகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் புலம்பல்

மூத்த முத்தாய் எம்மோடு பிறந்த,
முத்தான அறிவுரைகள் பலவும் கூறி
செப்பமாய் எம்மை செதுக்கிவிட்டு
செம்மலே அண்ணா எங்கு சென்றீரோ?
வையக வாழ்வில் நாம் மகிழ்வுடன் வாழ
வாழ்க்கையுடன் எம்மை வழிநடாத்தி
கண்ணிமை போல கருத்துடன் காத்து
காத்திரமான பல கதைகளும் சொல்லி
ஆளுமையின் சிகரமாய் வலம் வந்து
ஆற்றல்கள் பல கொண்டு வாழ்வில்
சாதனைகள் பல தந்த சகோதரனே
மீளாத துயில் கொண்டு பரந்தாமன் பாதம்
பற்றிடச் சென்றீரோ?
அனுதினமும் உம் ஆத்மா சாந்திக்காய்
அகத்தினால் துதிப்போம் இறைவனை

சகோதரன் சி.சின்னராசா

சகோதரி சி.அன்னம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனரின் மனதில்

நேரிய பார்வையும் நிமிர்ந்த நடையும்

நேத்திரத்தில் தூய ஒளியும் கொண்டு

நேசமாய் எம்முடன் இணைத்து கொண்டீர்

பாசமாய் நாளும் பழகி வந்த நீங்கள்

எம் குடும்பத்திற்கும் கௌரவம் சேர்த்தீர்

என் அன்புச் சகோதரியின் காவலனாய் வந்து நின்று

காலத்தின் நீரோட்டத்தில் பல தடைகளையும் தகர்த்து

காத்திரமாய் அவர் வாழ்வை செப்பமிட்டு இன்று

பிறப்பின் பணி முடித்து இறைவனடி சேர்ந்தீரோ?

சித்திரவேலவனின் சித்திரத்தேர்க் கொட்டகையில்

சிறப்பான திறப்பு விழாவினை தலைமையேற்று முடித்தவரே!

சிற்பமாய் எம்மனதில் என்றும் நிலைத்திடுவீர்!

ஆசை.சுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனிமார் புலம்பல்...

எல்லோருடனும் அன்பும் பாசமும்

கொண்டு பேசுவீரே

நீர் எம்மோடு பேசும் போது

காலம் போவதே தெரியாமால் இருக்குமே...

யார் பிள்ளைகளையும் உம் பிள்ளைகளைப் போல்

கவனிப்பீரே...

உங்கள் இனிய சொல்லை

எப்போ கேட்போம்

உங்களோடு கதை பேசிய நாட்கள்

மறக்க முடியவில்லை

நீர் நோய்வாய்ப்பட்டு இருந்த

வேளையிலும் உம் சிரிப்பு மாறவில்லையே

நீர் இறந்த செய்தி கேட்டதும்

கதிகலங்கி நிற்கிறோம்

ஆண்டாண்டு காலம் அழுது புலம்பினாலும்

மாண்டவர் மீண்டும் வருவது இல்லை இது நியதி

என்று கூறி ஆறுதல் அடைகிறோம்.

மைத்துனிமார்

பூமலர், யோகராணி

றதி, வசந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவினர்கள் புலம்பல்

துள்ளித் திரிந்த பள்ளிப்பருவம் முதல்

தெள்ளந் தெளிந்த மூப்பு வயது வரை

செக்கச் சிவந்த மேனியுடன்

செப்பமாய் வலம்வந்த மாணிக்கமே

அன்பினால் அனைவரையும் அரவணைத்து

அகத்தினில் தூய சிந்தனை வளர்த்து

பழகிய உறவுகள் எம்மை தவிக்கவிட்டு

பாரினில் இடமின்றி பரலோகம் சென்றீரோ?

காணத்துடிக்கும் எம்விழிகள் சிந்தும் துளி நீர் கூட

காய மறுக்கிறதே காணத்துடிக்கிறதே

ஆற்ற முடியாது அலறுகின்றோம் – இனி

ஆறுதலாய் யார் எமக்கு?

வல்லிபுர ஆழ்வாரை சிந்தையிலே சொல்பவரே

அறிவுரைகள் சொல்வதற்கு இனி யார் வருவார்? உம்

ஆத்மாவின் சாந்திக்காய் இறைவனையே இறைஞ்சுகின்றோம்

ஓம் சாந்தி !! சாந்தி ! சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியின் போர்க்காலங்களில் போரின் வாழ்வோடும் விடுதலைப்போராட்டத்துக்கான வாழ்வோடும் தன்னை ஒன்றிணைத்து பயணித்த மாணிக்கம் அண்ணர் இன்று இயற்கை எய்தினார்.

போர்க்காலத்தில் போர் எழுச்சி தொடக்கம் மக்கள் எழுச்சிக்கூட்டங்கள் போர் எழுச்சிக்கூட்டங்களில் மாணிக்கம் அண்ணனின் முகம் முன்னுக்கே நிற்கும்.அன்போடும் உரிமையோடும் பழகும் மனிதர்.படையினரின் கட்டுப்பாட்டில் மன்னாரும் வவுனியாவும் மற்றும் வன்னியின் ஏனைய பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டிலும் இருந்த காலத்தில் துணிச்சலோடு வவுனியா மன்னாருக்கு எழுச்சிப்பரப்புரைக்காக சென்ற போர் எழுச்சி அணிகளோடு தானும் ஒருவனாய் பயணித்து மண்ணுக்கான பணியை திறம்பட ஆற்றியவர்.

புலிப்போராளிகளோடு மிகவும் நேசம் மிக்கவர். மண்ணின் விடுதலையில் ஆறாத தாகம் கொண்ட மனிதர். தான் பிறந்த நிலத்தின் மீது மிகுந்த பற்றுக்கொண்டவர் இந்த நாட்டுப்பற்றாளன். தான் மட்டும் அல்லாது தனது புதல்வர்களையும் நாட்டுக்காக அர்ப்பணித்தவர்.

வன்னிமண் இக்கட்டான போர்ச்சூழலில் சிக்குண்டிருந்தபோதும் தனது நகைச்சுவையான பேச்சினால் அனைவரையும் உற்சாகப்படுத்தி போர்ச்சூழலை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளவைத்த உன்னதமான மனிதர்.

அதனோடு வன்னி மண்ணின் கற்பகதருவான பனை வள துறையின் வளர்ச்சியில் நெடுங்கால பணியாளன். அதன் வளர்ச்சியில் அவரின் பங்கு முக்கியமானது.

போரின் வடுக்களை சுமந்த கிளிநொச்சி மக்கள் வாழும்வரை அன்னாரின் ஞாபகங்கள் அழியாது

கோமேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சிருக்கும் வரை நினைவுகள் பிரியாது

அன்பாலும் வசீகரப்புன்னகையாலும் மக்கள் சேவையாலும் எங்கள் எல்லோர் மனங்களிலும் நீக்கமற நிறைந்துள்ள அன்பும் பிரியமும் உள்ள ஏ.வி.கே.மாணிக்கம் என்னும் மாணிக்கண்ணர் மறைந்து ஒரு மாதம்ஓடி மறைந்து விட்டது.

அன்றைய இரவு எனது இல்லத்தில் இருந்த போது மாணிக்கண்ணர் இறைபதம் எய்திய துயரச் செய்தி கிடைத்து மிகவும் அதிர்ச்சியும் துயரமும் அடைந்தேன்.

அமரர் எனது குடும்ப நண்பர் கிளிநொச்சி வாழ் மக்களுக்கு தனது சேவையாலும் தமிழர் தாயக விடிவிற்காக பலவிதமான ஆக்கபூர்வ பணிகளையும் காலநேரம் பாராது வழங்கியவர்.

நான் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் கடமையாற்றிய போது அமரர் மாணிக்கம் என்னுடன் நட்பானார். அவரது செய்திகளுக்கு நான் முன்னுரிமை கொடுப்பேன்.

பனை அபிவிருத்திக்கு சபையில் உயர் பதவி வகித்த அன்னார் பலவித பனை அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து சமுதாயத்தில் நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கினார். பனம் தொழிலில் நவீனத்துவத்தை புகுத்தினார்.

பலவித சமூக மக்கள் கூட்டமைப்புக்களை உருவாக்கினார். தேசிய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய செயற்பாட்டாளராக திகழ்ந்தார். பலவித சமய, சமூகப் பணிகளை முன்னெடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக அன்புக்கு பாத்திரமான அமரர் ஏ.வி.கே.மாணிக்கம் ஆற்றிய மக்கள் பணி அளப்பெரியது.

இவரின் குடும்பம் கல்வியால் உயர்ந்த குடும்பம். மற்றவர்களுக்கு முன் உதாரணமான குடும்பம் அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும், ஏனைய நண்பர்களுக்கும் மீண்டும் துயரத்தை வெளிப்படுத்தி அமரரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திறேன்.

சுபம்

டாக்டர்.க.திருமலோமூர்த்தி ஜே.பி,
மரண விசாரணை அதிகாரி,
மூத்த பத்திரிகையாளர்,
கௌரி கிளினிக்,
இல 28 கண்ணன் ஆலயவீதி,
கிளிநொச்சி நகர்,
19.03.2019.

**பொன்மொழிகள்**

நீ மகிழ்ச்சியாக இருக்கும் போது யாரை விரும்புகிறாயோ அவரை நினைத்துக் கொள்
நீ துயரத்தில் இருக்கும்போது உன்னை யார் விரும்புகிறார்களோ அவரை நினைத்துக்கொள்
உங்கள் இதயத்தில் மகிழ்ச்சி
உங்கள் முகத்தில் புன்னகை
உங்கள் ஆன்மாவில் புத்துணர்வு
உங்கள் வாழ்வில் வெற்றி
உங்கள் இல்லத்தில் அன்பின் நறுமணம்
இவை அனைத்தும் உங்களுக்கு என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவுகளாக நிழலாடுகின்றன்

நல்லாரை காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே நல்லார்
குணங்களை உரைப்பதும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே.

நமது வாழ்க்கைப் பயணத்தில் பலரை சந்திக்கின்றோம். எல்லோரும் அல்ல ஒரு சிலர் தான் தம் சொல்லாலும், செயலாலும் நம் உள்ளத்தைத் தொடுபவர்கள். அப்படியான அனுபவத்தை ஒருவன் பெற்றால் அவன் பாக்கியசாலிதான். அமரர் ஏ.வி.கே மாணிக்கத்தை இப்படியான ஒரு மதிப்பண்போடு தான் அவரை நேசித்தேன். அதனால்தான் எழுதுகிறேன்.

ஒரு மனிதனுடைய வாழ்வும் வயதும் அவர் இந்த பூமியில் வாழும் காலத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. அவர் மற்றவர்களின் மனங்களில் வாழும் காலத்தால் தீர்மானிக்கப்படுகிறது. நிஜமுகம் தெரியாத எத்தனையோ மனிதர்கள் கூட தங்களது வாழ்வாலும் பணியாலும், பண்பாலும், மற்றவர்களன் மனதில் வாழுகின்றார்கள் என்றால் அமரர் மாணிக்கம் மக்கள் மனதில் என்றும் எப்போதும் மாணிக்கம் தான்.

வந்தாரை வரவேற்கும் வளமிகு வடமராட்சியின் சிங்கநகரில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று இளவயதினிலே மக்கள் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சமய, சமூக கூட்டுறவு அரசியல் போன்ற துறைகளில் தன்னலமற்ற சேவையாற்றியவர். தமிழ் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விலும் வரலாற்றிலும் மறக்கவும் மறைக்கவும் முடியாத துன்பியல் என்றால் 1995ம் ஆண்டின் இடப்பெயர்வு, மக்களோடு மக்களாக நானும் இடம்பெயர்ந்து வன்னிப்பெரும் நிலப்பரப்பிற்கு சென்றபோது பல அன்பர்களினதும் பண்பாளர்களினதும் வரவேற்பும், நட்பும் கிடைத்தது. அவர்களில் ஒருவர் தான் அமரர் மாணிக்கம்.

பேச்சிலும், மூச்சிலும் தமிழ்த்தேசியத்தை நேசித்தவர் என்ற காரணத்தினால் தேசிய விடுதலைப் போராட்டங்களில் உயிர்த்துடிப்பாக உயிரையும் மதிக்காது செயற்பட்டவர் போரினாலும், பொருளாதர போக்குவரத்து தடைகளினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எம்மோடு இணைந்து துணிந்து தூய்மையுடன் மக்களுக்கு நம்பிக்கையூட்டி பல்துறைசார்ந்த அமைப்புக்கள் ஊடாக சேவை ஆற்றியதை இன்றும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். மறக்க முடியாதவை இதற்கு அவரது குடும்பத்தினரின் ஒத்துழைப்பு அளப்பரியது.

தமிழ் தேசியத்தை நேசித்தவரும், தந்தை செல்வாவின் அரசியல் கொள்கையில் உறுதி கொண்டவருமான மங்கா மனிதன் மாணிக்கம் என்றும் எம் நினைவில் வாழ்வார். அவர் சேவைகள் வாழும் என்ற மனநிறைவுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திப்போம்.

சாந்தி ! சாந்தி ! சாந்தி !

சொலமன் சூ.சிறில்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
இன்னாள் யாழ்ப்பாண மா.ந.சபை உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கல் செய்தி

முதற்கண் பண்பான,பகுத்தறிவான குடும்பத்தை நேசித்த பெயருக்கு அமைவானகுடும்பத் தலைவன் மாணிக்கத்தை இழந்து துயர் உற்றிருக்கும் அவர் தம்மனைவி, பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள் மற்றும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை சமர்ப்பணம் செய்கின்றேன். அனைவருக்கும் அவர்கள் பெயருக்குஏற்ப செயற்பாடுகள் அமைந்துவிடுவதில்லை. ஆனால் அமரர் மாணிக்கம் அவர்தம் பெயர்மட்டும் அல்ல செயற்பாடே மாணிக்கம்தான். எனக்கும் அவருக்கும் கிட்டத்தட்ட ஐம்பது வருடகால நட்பு, அன்பு. எனது பல விதமான செயற்பாடுகளுக்கு அவரும் உறுதுணையாக இருந்தவர். சாதனைகள் புரிந்தோம்.அதன் பயன் இன்று அந்த மாவட்டமே அனுபவித்துக் கொண்டிருக்கிறது. பலவைத்திய நிபுணர்கள், பொறியியலாளர்கள், பொருளியலாலர்கள், பலபட்டதாரிகள் என பெரும் கல்விச் சமூகமே உருவாகியுள்ளதுடன் அம் மாவட்ட பொருளாதார சுமையும் ஓரளவில் நீங்கியுள்ளது. எதையும், எப்பொழுதும் சாதிக்கவேண்டும் என்றே அவா கொண்டிருப்பார் மாணிக்கம். சினம், கோபம் அவரிடம் இல்லை. பண்பான குணாதிசயம் கொண்டவர். பிறப்பு, இறப்பு நிர்னயம் இடையில் நாம் வாழும் வாழ்வே எம்மை வாழவைக்கின்றது. அது மாணிக்கத்துக்கு சாலவேபொருந்தும் அவரின் அமரத்துவம் பெரும் வேதனையைத் தருகின்றது. விதிஒன்று செய்தால் மீண்டும் சேர்ந்து கொள்வோம். அன்னார் தம் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுவோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு"

கு.ந.நாயகம் சிற்றம்பலம்

கு.ந.நாயகம் சிற்றம்பலம்,(நடராஜா, நாயகம்)
ஆகில இலங்கை சமாதான நீதவான்,
முன்னால் தலைவர் சாயி சேவா மன்றம்,
திருகோணமலை.
முன்னால் தலைவர், சாரணர் சங்கம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கம் அண்ணருடனான காலம்

1995 அப்போது வன்னி கிளிநொச்சியில் வாழ்ந்து கொண்டிருந்தேன். அதன் பிறகு யாழ் இடப்பெயர்வில் வன்னிக்கு வந்த மனிதர்களில் இறுதிவரை நெஞ்சோடு நெருங்கியிருந்தவர் இவர்.எனது தந்தையாருக்கும் நெருக்கமாகி நண்பரானார்.பின்பு கிளிநொச்சி ஆக்கிரமிக்கப்பட்டபோது அக்கராயன் இடம்பெயர்ந்தோம் அங்கே மாணிக்கம் அண்ணனுடன் இன்னும் நெருக்கம் ஏற்பட்டது.போர் எழுச்சி ஈகம் என்று இருந்த அந்த நாட்களில் அவரும் நானும் மற்றவர்களோடு ஒரு இலட்சிய பயணத்தில் கலந்திருந்தோம்.எப்போதும் புன்சிரிப்புடன் பொறுப்புக்களோடும் சிநேகத்தோடும் பல பணிகளை செய்தவர்களில் அவரும் ஒருவராக இருந்தார்.

விடுதலை முரசு அறையப்படும் பொழுதில் ஒரு மண்பற்றாளனாக முன்வரிசையில் தோன்றும் முகங்களில் மாணிக்கம் அண்ணனை காணாலாம்.அவரோடு கதைத்து சிரிப்பது எங்களுக்கு அவர் நோய்வாய்ப்படும்வரை கூடவே இருந்தது.கிளிநொச்சியில் அநேகமாக எல்லோருக்கும் அறிந்த தோற்றமாகவும் பண்பாகவும் அவர் இருந்தார்.ஊர்கள் கடந்து வன்னிபெருநிலமெங்கும் பரப்புரைகளுக்காக எப்போதும் பயணிக்க தயாரானவராகவும் பயணித்தவராகவும் அவர் இருந்தார்.கிளிநொச்சியில் திண்ணை தெரு சந்திப்புக்கள் சம கால அரசியல் கருத்தரங்குகள் புத்தகவெளியீடுகள் அஞ்சலி நிகழ்வுகள் கிராம அபிவிருத்தி சங்கம் கோவில் தொண்டு நிறுவனங்கள் எல்லாவற்றிலும் மாணிக்கம் அண்ணனின் ஒத்தாசையும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பீரமான தோற்றமும் கனிவான பேச்சும் என் கண்ணுக்குள் நிற்கின்றது.முள்ளிவாய்க்கால் நோக்கிய அத்தனை குண்டுமழை பிணங்களாய் மனிதர்கள் கொத்துகொத்தாய் வீழும் பயணத்திலும் எல்லாவற்றையும் நினைத்து நொந்தபடி நம்பிக்கையோடு இறுதிவரை வந்தார்.மாணிக்கம் அண்ணன் ஒரு ஈழத்தவனுக்கு இருகக்கூடிய அகதி வாழ்வு மரணத்துள் வாழ்வு போருக்குள் புன்னகை இழப்புக்கள் எல்லாவற்றையும் வாழ்ந்து முடித்து சென்றிருக்கின்றார்.அப்படியொரு மனிதரோடு வாழ்க்கையில் இம்மண்ணில் சந்தித்து பயணிக்க கிடைத்தது பேறு என்றே நினைப்பேன்.அவர் நினைவு என்றும் நிலைத்திருக்கும்

பொன்.காந்தன்
கவிஞர்.

**தலைக்கவசம்**



**தலைக்கவசம் உயிர் கவசம்**
**"தர்மம் தலை காக்கும்" பழமொழி**
**"தலைக்கவசம் தலைகாக்கும் புதுமொழி**
**மன்னனுக்கு முடி இழந்தால் அவமானம்**
**மனிதனுக்கு தலைக்கவசம் இழந்தால் மரணம்**
**காவலரிடம் மாட்டிக் கொள்வதை தவிர்ப்பதற்காக அன்றி**
**காலனிடம் தப்பிக்க அணியுங்கள் தலைக்கவசம்**
**வீட்டுக்கு ஒரு மரம் வளர்த்தால் தலைமுறை வாழும்**
**வீட்டுக்கொரு தலைக்கவசம் வாங்கி வைத்தால்**
**தலைக்கு வந்தது தலைக் கவசத்தோடு போகும்**
**குழந்தைகளின் மன்டை ஓடு மிகவும் மென்மையானது**
**ஆனால் மூளை பெறுமதி மிக்கது**
**குழந்தைக்கொரு தலைக்கவசம் அணிவதனால்**
**குழந்தைச் செல்வங்களின் உயிரைக் காப்போம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# තල් සංවර්ධන මණ්ඩලය
# பனை அபிவிருத்திச் சபை
# PALMYRAH DEVELOPMENT BOARD

ජාතික ප්‍රතිපත්ති, ආර්ථික කටයුතු, නැවත පදිංචි කිරීම හා පුනරුත්ථාපන, උතුරු පළාත් සංවර්ධන, වෘත්තීය පුහුණු හා නිපුණතා සංවර්ධන සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு

Ministry of National Policies, Economic Affairs, Resettlement and Rehabilitation, Northern Province Development, Vocational Training & Skills Development and Youth Affairs.


## சமூகச் செம்மல் அமரர் A.V.K.மாணிக்கம் அவர்கள்

கடந்த 01.03.2019 அன்று இறைவனடி எய்திய சமூகச் செம்மல், இனயுணர்வாளர், கூட்டுறவாளர், சிறந்த நிர்வாகி, ஆத்மீகவாதி என்ற பல்வேறு பரிமாணங்களையும் தன்னகத்தே கொண்டவரும் எனது தந்தைவழி உறவுக்காரருமான அமரர் A.V.K.மாணிக்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரிகையின் போது மீண்டும் ஒருமுறை அன்னாரை நினைவு கூரக் கிடைத்த சந்தர்ப்பத்தை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன்.

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் திமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்ட சிங்கநகர் பெற்றெடுத்த செம்மல் அமரர் அண்ணல் மாணிக்கம் அவர்கள் இனத்திற்கும் சமூகத்திற்கும் செய்த சேவைகள் அளப்பரியவை. பூநகரி பனை வளக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளராக கடமையாற்றிய காலத்தில் தொழிலாளர்களுக்கு செய்த சேவைகள் என்றும் நினைவு கூரத்தக்கவை.

போர்ச்சூழல் நிலவிய காலகட்டத்தில் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சி மாவட்டத்தின் பனை அபிவிருத்திச் சபையின் இணைப்பாளராக துணிச்சலுடன் பொறுப்பேற்று திறம்படக் கடமையாற்றிப் பேரும் புகழும் சம்பாதித்த பெருமகன்.

இனவிடுதலைப் போராட்ட காலத்தில் தனது சக்திக்குட்பட்ட சகல உதவிகளையும் பங்களிப்புகளையும் வழங்கி இனமானம் காத்த வீரர் அமரர் மாணிக்கம் அவர்கள். பங்காளியாக பிரசாரப் பீரங்கியாக ஆலோசகராக சமயத்திற்கேற்றவகையில் முன்தோன்றும்(rise to the occasion) ஆபத்தாந்தவராக விளங்கி சகல மக்களினதும் அன்பையும் மதிப்பையும் பெற்றவர்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் மடமமைத்து தண்ணீர் பந்தல் கட்டி ஆலயத்திற்கு வரும் பத்தர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்து ஆன்மீகப் பணியாற்றியவர் அமரர் மாணிக்கம் அவர்கள்.


Head Office: National Housing Secretariat, Kandy Road, Jaffna, Sri Lanka. Tel: 0212222034 Fax: 0212224134 E-mail: slpdbho@yahoo.com
Palmyrah Research Institute, Kandy Road, Navatkuli, Kaithady, Sri Lanka. Tel: 0212057065/67 Fax: 0212057066 E-mail: slpri@yahoo.com
City Office: City Office: No. 502, Galle Road, Colombo - 06. Tel: 0112364406 Fax: 0112364405 E-mail: slpalmyrah@gmail.com
Web Site: www.pdb.gov.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# තල් සංවර්ධන මණ්ඩලය
## பனை அபிவிருத்திச் சபை
## PALMYRAH DEVELOPMENT BOARD

ජාතික ප්‍රතිපත්ති, ආර්ථික කටයුතු, නැවත පදිංචි කිරීම හා පුනරුත්ථාපන, උතුරු පළාත් සංවර්ධන, වෘත්තීය පුහුණු හා නිපුණතා සංවර්ධන සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு

Ministry of National Policies, Economic Affairs, Resettlement and Rehabilitation, Northern Province Development, Vocational Training & Skills Development and Youth Affairs.


"தோன்றில் புகழோடு தோன்றுக அகிதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று" என்பது வள்ளுவன் வாக்கு. அவ்வாக்குக்கு இலக்கணமாக அமரர் அவர்கள் புகழுடன் தோன்றி மறைந்துள்ளார். அதனால் அவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகியுள்ளார். அவர் தம் நாமம் வாழ புகழ் விளங்க இறைவனை வேண்டியமைகிறேன்.

நன்றி

வணக்கம்.

ஆ.ந.இராசேந்திரன்,
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை.

ஆ.ந.இராசேந்திரன் ஜ.பி
HNDA, APFA, AMA, FMAAT, FIFFM(UK)
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை
இலங்கை


Head Office: National Housing Secretariat, Kandy Road, Jaffna, Sri Lanka. Tel: 0212222034 Fax: 0212224154 E-mail: slpdbho@yahoo.com
Palmyrah Research Institute, Kandy Road, Navatkuli, Kaithady, Sri Lanka. Tel: 0212057065/67 Fax: 0212057066 E-mail: slpri@yahoo.com
City Office: City Office: No. 502, Galle Road, Colombo - 06. Tel: 0112364406 Fax: 0112364405 E-mail: slpalmyrah@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதருள் மாணிக்கம்

சிங்கநகர் மண் ஈர்ந்த மாணிக்கம்
சித்திரமாய் பல சேவை செய்ததனால்
நட்பு வட்டமதை விரிவாக்கி – என்றும்
நண்பர்கள் மனங்களிலே நிலைத்து நின்றார்
அச்சுநகர் ஈர்ந்த காரிகையாய் இராசமலர் – கரம்பற்றி
அன்பினால் செல்வங்கள் பலவும் பெற்றார்
மிடுக்கான தோற்றமும் – நேரிய நடையும்
மிருதுவான குணமும் ஆளுமைத்தன்மையும்
வசீகரப் பேச்சும் வதனமதில் புன்முறுவலும்
வஞ்சகம் இல்லா நெஞ்சமும் கொண்டு
இறை சிந்தனையும் இங்கிதமாய பேச்சும் – கொண்டவராம்
இன்று எம்மிடமிருந்து அகன்று போனதுவே
மண்ணக வாழ்வை வழமுடன் வாழ்ந்து
விண்ணக வாழ்வை தேடியே சென்றீர்
பனை அபிவிருத்திச் சபையிலே இணைப்பாளராயிருந்து
பாரினில் பல சேவை ஆற்றி வந்தீர்
சமூகத்தின் நிறுவனங்கள் பலதும் வளர்த்து
சனசமூக நிலையத்தின் தலைவராயிருந்து
ஆற்றிய சேவைகள் அளப்பரியது
ஆளுமை கொண்ட அழகனே
மண்ணகம் விட்டு விண்ணகம் சென்றதேனோ?
மனிதருள் மாணிக்கமே உம் ஆத்மா சாந்திக்காய்
வல்லிபுரத் தாழ்வார் பாதங்கள் பணிகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சு.ஶ்ரீகாந்
அச்சுவேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஸ்ரீ கண்ணன் கவசம்



அகரம் முதலே அழியாப் பொருளே
ஆயர் குலமே நேயர் கரமே
இகமும் பரமும் இணையும் இடமே
ஈதல் மரபாம் இதயத் தவமே
உலகக் குடையே வேதப் பொருளே
ஊதும் குழலுள் வேதப் பொருளே
எரியும் கனலில் தெரியும் புனலே
ஏழை மனதில் வாழும் அருளே
ஐயம் தீர்க்கும் அறிவுக் கதிரே
ஐவர் துணையே அன்புச் சிலையே
ஒளியே விழியே உயிரே வழியே
ஓடும் நதியில் பாடும் அலையே
அவ்வவ்வுலகை ஆக்கும் நிலையே
அடியேன் சரணம் சரணம் சரணம்
அறமே அறமே அறமே அறமே
திறமே திறமே திறமே திறமே
தவமே தவமே தவமே தவமே
வரமே வரமே வரமே வரமே
வேதம் விளையும் வித்தே விளைவே
நாதம் பொழியும் நலமே நிலமே
ஓதும் பொழுதே உடனே வருவாய்
உள்ளம் கேட்கும் வெள்ளம் தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாக் கவலை அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொய்யாமொழியே பொங்கும் நிலவே
பூமிக் குடையின் காவற் பொருளே
பார்த்தன் பணியும் பாதம் காக்க
பாஞ்ச சன்னியம் பக்தனைக்காக்க
மூடர்கள் தமையன் மோகனன் காக்க
முள்ளில் மலராய் முனைத்தோன் காண்ண
வாடும் உயிரை மன்னவன் காக்க
தேடும் விழியைத் திருமால் காக்க
கேலிப்பொருளைக் கிருஷ்ணன் காக்க
கண்ணீர் நதியை கண்ணன் காக்க
துன்பம் என்றோரு சுமையைத் தீர்க்க
தூயோன் வருக துணையே தருக
மாதர் கற்பும் மடவார் நோன்பும்
மாயோன் காக்க மலைபோல் வருக
தகிடத் தகிடத் தகிடத் தகவென
தறிபடு துன்பம் தறிகெட ஓட
தகிடத் திகிடத் திகிடத் திகிடத்
திசைவரு கவலை பசை இல தாக
துருவத் துருவத் துருவத் துருவிடத்
தொலையாய் பொருளே அலையாய் வருக
நிஷ்கா மத்தில் நிறைவோன் வருக
காமசந் யாசக் களமே வருக
ஞானம் யோகம் நல்குவன் வருக
நல்லோர் வாழ்வில் நலமே நிறைக
அடியேன் துயரம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கும் வேலும் புண்ணாக் காது
பொருந்தும் துயரம் பொடிபடு மாறு
தாங்கும் தலைவன் தாமரைக் கண்ணன்
தாளில் வீழந்தேன் சரணம் சரணம்
மதுசூ தனனே மனிதன் சரணம்
இருடீ கேச இயலான் சரணம்
கீதாச்சாரிய கிருஷ்ணா சரணம்
வேதாச்சாரிய வேந்தே சரணம்
தேவகி மைந்தா சிறியேன் சரணம்
யசோத குமார அடியேன் சரணம்
உன்னை விட்டொரு உறவுகளில்லை
என்னை விட்டொரு இனியவ னில்லை
நம்மை விட்டொரு நண்பர்க ளில்லை
எங்கெங் கேநான் இருந்திடும் போதும்
அங்கங்கே நீ அருள்செய வருக
கோசலை ஈன்ற குமரா வருக
கோதையின் மாலை கொண்டவன் வருக
ரகுவம் சத்தின் நாயகன் வருக
யதுவம் சத்தின் யாதவன் வருக
மதுவை வென்ற மாதவன் வருக
மலைக்குடி கொண்ட மாயவன் வருக
திருப்பதி யாளும் திருமால் வருக
திருவரங் கத்துப் பெருமான் வருக
இராவணன் கொடுமை தீர்த்தாய் துன்பம்
இரா" வணம் எமக்கும் இன்னருள் புரிக
கம்சன் கொடுமை களைந்தோய் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனை வெல்லக் கைவலி தருக
நெற்றியில் திருமண நெஞ்சில் வைரம்
காதில் குண்டலம் கையில் வில்லொடு
தண்டைக் காலில் சலங்கை குலுங்க
அண்டையில் வந்து அருளே புரிக
கௌரவம் காக்கக் கண்ணா வருக
பார்த்தன் மகிழப் பாடம் சொன்னாய்
படித்தவன் மகிழப் பரமே வருக
மூன்று குணங்கள் முறையாய்க் கூறிய
சான்றோன் பாதம் தாவி யணைத்தேன்
சிக்கென உன்னைச் சேர்த்துப் பிடித்தேன்
பக்கென உந்தன் பாதம் பற்றினேன்
கொக்கென நின்று குறிவைத் திருந்தேன்
அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன்
இக்கணம் என்னை ஏங்க விடாமல்
தக்கவ னேநீ தயவுடன் அருள்க
கல்லாய்ப் போனவன் காலடி பட்டு
பெண்ணாய் ஆனது பிழையே அன்று
உன்னால் தானே உலகம் இயக்கம்
கண்ணனி லாமல் கடல்வான் ஏது
கண்ணனி லாமல் கடவுளு மில்லை
கண்ணனி லாமல் கவிதையு மில்லை
கண்ணினி லாவிடில் காற்றே இல்லை
எத்தனை பிறவி எத்தனை பிறவி
அத்தனை பிறவியும் அடியேன் கொண்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய நாதன் தாள்களை மறவேன்
தத்துவத் கண்ணன் தனிமுகம் மறவேன்
உன்னை நம்பி உனையே சேர்ந்தால்
பிறவிக ளிலைநீ பேசிய பேச்சு
உலகில் போதும் ஒருமுறை மூச்சு
உன்னிடம் சேர்த்து உன்வடி வாக்கு
இங்கே நாங்கள் இருக்கும் வரையில்
சங்கு முழங்கு தர்மம் நிலைக்க
பிள்ளைகள் வாழ்க்கை பிழையா காமல்
மனையவன் வாழ்க்கை மாண்பு கெடாமல்
இல்லை என்றொரு நாளில் லாமல்
தொல்லை என்பது துளியு மிலாமல்
தொற்றும் நோய்கள் பற்றிவிடாமல்
முதுமை துயரம் மூண்டு விடாமல்
படுக்கையில் விழுந்து பரிதவிக்காமல்
சிந்தனை கெட்டுத் திறமையும் கெட்டு
நிந்தனை பெற்று நீங்கி விடாமல்
என்றும் பதினா றின்மை வழங்கு
இப்பணிதொடர் அற்புதம் காட்டு
தளரா மேனியில் சக்தியை கூட்டு
தாய்போ லிருந்து சாதம் ஊட்டு
வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென
ஊரார்க் கென்னை உதாரணம் காட்டு
உலகில் ஒருவன் உத்தமன் இவனென
உயிர்கள் பேசிடும் ஒருநிலை கூட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியவர் பெரியவர் வறியவர் செல்வர்
சரிசரி சரியெனத் தலையை யசைக்க
பொலிபொலி பொலழயெனப் புகழும் விளங்க
மளமள மளவென மனையிருள் நீங்க
கலகல கல கலவென காசுகள் சேர
தளதள தளவெளத் தர்மம் தழைக்க
வரவர வரவர வாய்ப்புக்கள் வாய்க்க
ரகுபதி பசுபதி நன்மைகள் அருள்க
ஐயா சரணம் சரணம் சரணம்
அடியேன் வாழ்வில் நீயே கவசம்
கவசம் கவசம் கவசம் சவசம்
வந்தது வாழ்வில் மன்னவன் கவசம்
கவசம் கவசம் கவசம் கவசம்
வாழ்க்கை என்னும் கோபுரக் கவசம்
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனே துணையென அறிவோம் அறிவோம்
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனிடம் எதையும் தருவோம் தருவோம்
ஜெயஜெய ராமா ஜெயஜெய கிருஷ்ணா
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய

(வட்டக்கச்சி மாயவனூர் ஸ்ரீரங்கநாதப் பெருமானுக்கு சமர்ப்பணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒருவரது பிறப்பு சம்பவமாகலாம் ஆனால் இறப்பு ஓர் சரித்திரமாக இருக்க வேண்டும்.**

**பிரபல நூல்களும் எழுதியவர்களும்**

1. திருக்குறள் – திருவள்ளுவர்
2. இராமாயாணம் – வடமொழி வால்மீகி, தமிழ் – கம்பர்
3. மகாபாரதம் – வேதவியாசர்
4. சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள்
5. கந்தபுராணம் – கச்சியப்பசிவாச்சாரியார்
6. பெரியபுராணம் – சேக்கிழார்
7. சீறாப்புராணம் – உமறுப்புலவர்
8. தேம்பாவணி –வீரமாமுனிவர்
9. இயேசு காவியம் – கண்ணதாசன்
10. கீதாஞ்சலி – இரவீந்திரநாத் தாகூர்
11. மகாவம்சம் – மகாநாமதேரர்
12. சத்தியசோதனை –மகாத்மாகாந்தி
13. சாகுந்தலம் – காளிதாசர்
14. அக்கினிச்சிறகுகள் – அப்துல் கலாம்
15. யாழ்நூல் – சுவாமி விபுலானந்தர்

**வினா** A,B,C,D, என்னும் ஆங்கில எழுத்துக்களும் வராத நூறு சொற்கள் எழுதுக?


**விடை** 1–99 வரையிலான எண்களை ஆங்கிலத்தில் எழுதுக.

One Ninety Nine 100வது சொல் Stop



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".




**இதுவே உலக நியதியும்,**
**எனது படைப்பின் சாராம்சமுமாகும்.**
**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அணைந்தும் அணையா ஒளிப்பிளம்பாய் அன்பு , பண்பு,
பாசம் நிறைந்து எம்முடன் வாழ்ந்த எங்கள் குடும்பத்
தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து
உதவிய அன்புள்ளங்களுக்கும் , மற்றும்
இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்.
உள்ளூர் மற்றும் , வெளிமாவட்டங்களிலிருந்து இறுதிக்
கிரியைகளில் பங்குபற்றிய நல்லுள்ளங்களிற்கும்.
வெளிநாடுகளிலிருந்து அனுதாபச் செய்தி
அனுப்பியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப்பதாதைகள்
வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் , மலர்வளையம்
சார்த்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம்
வெளியிட்டோருக்கும், சமூக வலைத்தளங்களூடாக
அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், அந்தியேட்டி,
வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொண்ட
அன்புள்ளங்களுக்கும் இம்மலரினை அழகாக அச்சிட்டு
தந்த அச்சுவேலி தர்சா தமிழ்ப் பதிப்பகத்தாருக்கும்
மற்றும் பல வழிகளில் எமக்கு உற்ற துணையாக நின்று
உதவி புரிந்தவர்களுக்கும் எமதுமனமார்ந்த
நன்றியை நவில்கின்றோம்.



சுனேத்தாலயம்,
அச்சுவேலி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THARSA TAMIL PRINTERS
அச்சுவேலி.
021 205 8206